ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1797/21 - 2013 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2013.02.15

*1797/21 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 5/2012*

**1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டம்**

*1973 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கைப் பத்திரிகைப் பேரவைச் சட்டத்தின் 10 ஆம், 25 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 30 ஆம் பிரிவின் கீழ், வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சரினால் ஆக்கப்பட்டதும், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி.*

கெஹெலிய ரம்புக்வெல்ல,
வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர்.

கொழும்பு,
*2013, சனவரி 13.*

ஒழுங்குவிதி

*1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி ய63/5 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு கடைசியாக 1994 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதிய 806/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்டவாறான 1973 ஆம் ஆண்டின் பத்திரிகைப் பேரவை (பொது) ஒழுங்குவிதிகள் அதன் 11 ஆம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-*

"11. (அ) விடயத்திற்கேற்ப, உரிமையாளரின் அல்லது பதிப்பாசிரியரின் பெயரைப் பதிவு செய்வதற்கு அல்லதுபதிவினைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பத்தைச் செய்யும் ஒரு புதினப் பத்திரிகையின் உரிமையாளர் அல்லது பதிப்பாசிரியர் ஒவ்வொருவரும் கீழே எடுத்துக்காட்டப்பட்ட வீதங்களுக்கிணங்க அதற்கான ஒரு கட்டணத்தை அத்தகைய விண்ணப்பத்துடன் அனுப்பிவைத்தல் வேண்டும் :-

1. ஒரு நாளாந்தப் புதினப்பத்திரிகை தொடர்பான பதிவுக்காக அல்லது பதிவின் புதுப்பித்தலுக்காக - ஐயாயிரம் ரூபா (ரூ. 5,000) ;
2. ஒரு வாராந்த புதினப்பத்திரிகை தொடர்பான பதிவுக்காக அல்லது பதிவின் புதுப்பித்தலுக்காக- மூவாயிரம் ரூபா (ரூ. 3,000) ;
3. ஏதேனும் வேறு புதினப்பத்திரிகை தொடர்பான பதிவுக்காக அல்லது பதிவின் புதுப்பித்தலுக்காக - இரண்டாயிரம் ரூபா (ரூ. 2,000) ;

(ஆ) ஏதேனும் ஆண்டின் மாச்சு 31 ஆந் திகதிக்குப் பின்னர் பதிவைப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் செய்யப்படுகின்றவிடத்து, காலங்கடந்தவொரு பதிவுக் கட்டணமாக, அந்த ஆண்டின் மாச்சு 31 ஆந் திகதிக்குப் பின்னர் தாமதம் தொடர்ந்திருந்த ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது அதன் - பகுதிக்கும் விடயத்திற்கேற்ப, அத்தகைய உரிமையாளர் அல்லது பதிப்பாசிரியரினால் ஐநூறு ரூபா (ரூ. 500) தொகையொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.".

*3 - 226*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானிகளை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.